# விவிலியம்: பெருமையும் தாழ்மையும்

**ஜெ. ஜெபதங்கம் பிரேமா**
சுப்பிரமணியபுரம், சாயர்புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6494

***முன்னுரை***

*உலகம் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்னர், கடவுள் மட்டுமே இருந்தார். மக்கள் இல்லை, உலகம் இல்லை, இரவு, பகல், காலம் இல்லை. வேறு எந்தப் பொருளுமே இல்லை. இதை நம்புவதற்கே வெகு கடினமாகத்தான் உள்ளது. ஆம், இத்தகைய நிலையில் தான் விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் படைப்பின் செயல் துவங்குகிறது. தேவன் எல்லாவற்றையும் ஒரு நோக்கத் திற்காகப் படைத்தார். "பெருமைக்கு எதிர்பதம் தாழ்மை" அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கோ எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ, கிருபை அளிக்கிறாறென்று சொல்லியிருக்கிறது". (யாக். 4:6) என்று கூறுவதன்படியே தேவனிடத்தில நாம் ஒவ்வொருவரும் தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாய் இருக்கிறது. அப்படி செய்வதினால் "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். (யோ. 14:20)" என்ற வசனத்தின் அடிப்படையில் இக்கட்டுரையில் நாம் அறிவோம்.*

## பெரியவன் யார்?

(மாற்கு 9:33-37)

அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்து வீட்டில் சேர்ந்தனர். அப்போது இயேசு தமது சீடர்களிடம் "நீங்கள் வழியிலே என்ன பேசி கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டார்.

அவர்கள் அமைதியாக இருந்தார்கள். வழியில் "தங்களுக்குள் யார் பெரியவன்?" என்று வாதிட்டுக் கொண்டிருந்தார்கள். இயேசு உட்கார்ந்து அவர்களிடம் "உங்களில் ஒருவன் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் தாழ்மை உடையவனாகவும், எல்லாருக்கும் பணிவிடை செய்கிறவனாகவும் இருக்க வேண்டும் என்றார். பின்னர் அவர் ஒரு குழந்தையைத் தன்னுடைய கைகளினால் அணைத்துக் கொண்டு இந்த குழந்தைகளை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான். என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பியவராகிய என் பிதாவையும் ஏற்றுக் கொள்கிறான்சு என்றார்.

(ஐ சாமு 17:8) அவன் வந்து நின்று இஸ்ரவேல் சேனைகளைப் பார்த்துச் சத்தமிட்டு, நீங்கள் யுத்தத்துக்கு அணிவகுத்து நிற்கிறது என்ன? நான் பெலிஸ்தன் அல்லவா?

நீங்கள் சவுலின் சேவகன் அல்லவா? உங்களில் ஒருவனைத் தெரிந்து கொள்ளுங்கள் அவன் என்னிடத்தில் வரட்டும்". கோலியாத்திடம் கர்வம், ஆணவம், பெருமை "நான் பெலிஸ்தன் அல்லவா என்று பின்னர் இஸ்ரவேலரைப் பார்த்து "நீங்கள்" சவுலின் சேவகர் அல்லவாசு என்பதையும் பாருங்கள்! இத்தனை வருடம் சேனையின் தேவனாகிய கர்த்தரின் வழிநடத்துதலுக்கு கீழப்பட்ட இஸ்ரவேல் மக்கள், தங்களுக்கு ஒருதலைவன் வேண்டும் என்று கேட்டதினால் இப்போர் நடந்தது. அவர்கள் கோலியாத்தை சேவகர்களாகத் தான் பார்த்தார்கள். கோலியாத், அவர்களை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களை கைவிட்டார் என்று நினைத்து விட்டான். ஆனால் கர்த்தரோ வழி தவறிய தம்முடைய பிள்ளைகளைத் தம்மிடம் சேர்க்கும் படியாய் அவர்களுக்காய் யாவையும் செய்து கொண்டிருந்தார். கோலியாத் நினைத்தான் "நான் பெரியவன்" ஏன்னென்றால் "நான் பெலிஸ்தன்" நான் உயரத்திலும், எடையிலும், நடையிலும் பெரியவன் என்று, தாவீது கோலியாத்து எந்த விதத்திலும் சமம் இல்லாததுபோல் தெரிந்தது ஆனால் ஒன்று மட்டும் வித்தியாசம்! அவன் தேவாதி தேவனின் சேவகன் கர்த்தரின் நாமத்தை கொண்டு செய்யும் காரியம் எல்லாம் வாய்க்கும்.

### இயேசுவைச் சார்ந்தவர் யார்?

(மாற்கு 9:38 - 41)

அப்பொழுது யோவான் அவரை நோக்கி போதகரே நம்மை பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம். அவன் நம்மை பின்பற்றாதவனானதால் அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயெசு: அவனை தடுக்க வேண்டாம் என் நாமத்தினிலே அற்புத?? செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்து தீங்கு சொல்ல மாட்டான் நமக்கு விரோதமாயிறாதவன் நமது பட்சத்திலிருக்கிறான் நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாகயிருக்கிறபடியினலே என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்." போதகரே, உம்முடைய பெயரால் ஒருவன் அசுத்த ஆவிகளைத் துரத்திக் கொண்டிருந்தான். ஆனால் அவன் நம்மைச் சேர்ந்தவன் அல்ல என்பதால் அவன் செய்வதை நிறுத்தும்படி கூறினோம் என்று யோவான் இயேசுவிடம் கூறினார். உடனே இயேசு அவர்களிடத்தில் அப்படிச் செய்யாதே என் பெயரைச் சொல்லி கொண்டு அற்புதம் செய்கிறவன் எவனும் எனக்கு எதிராகச் செயல்படமாட்டார்கள். என் நாமத்தினாலே அற்புதம் செய்கிறவன் எவனும் எனக்கு ஊழியக்காரனாய் இருப்பான். ஆதலால் எதைச் செய்தாலும் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி செய்ய வேண்டும்.

**"தேவனைச் சார்ந்து வாழ்கின்ற எனக்கு**
**என்றும் விடுதலை**
**அவரது நாமம் அறிந்த எனக்கு**
**அவரே அடைக்கலம்"**

என்றும் ஆனந்தம் என்ற பாடல் வரி நம்மை தைரியப்படுத்தும்.

### ஆண்டவரின் ஆசீர்வாதத்தை யார் பெற முடியும்?

மாற்கு 10:13-16

"அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள் இயேசு அதைக் கண்டு விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் அவர்களை தடைபண்ணாதிருங்கள் தேவனுடைய ராஜ்யம் அப்படி பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"

என்று சொல்லி". இன்று பல நேரங்களில் சிறு குழந்தைகளை உனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லி அவர்கள் மனதைக் காயப்படுத்துகிறோம். ஆனால் இயேசு, விரும்புவது சிறு குழந்தைகளை தான். ஏனென்றால் குழந்தைகள் மனது நன்மை, தீமை அறியா மனது. "பால் போல் மனசு" என்பர். ஆனால் இன்றைய கம்ப்யுட்டர் உலகில் பலர் சிறுவயது முதல் போதை பழக்கத்துக்கு அடிமையாகிவிடுகிறாற்கள். கர்த்தர் அருவருக்கும் காரியங்களில் தங்களை ஈடுபடுத்தி கொள்கின்றனர். அப்படி செய்வதினால் தேவகோபாக்கினைத் தான் வரும், பரலோக ஆசீர்வாதத்தை பெற முடியாது. கிறிஸ்து இயேசுவிலிருக்கும் சிந்தையே நம்மிடத்திலும் இருக்க வேண்டும் (எபேசியர் 6:1) ன் படி பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டும். (எபேசியர் 5:18)ன் படி "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினால் நிறைந்து" கர்த்தருக்கே துதியையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்த வேண்டும். இப்படிச் செய்வதினால் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளலாம்.

### துன்புற ஆயத்தமா

(மாற் 10:35-45) ம் வசனத்தில் யாக்கோபும் யோவானும் இயேசுவிடம் வந்து, "போதகரே நீர் எங்களுக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள். ஆதற்கு இயேசு அவர்களிடம் என்னவென்று கேட்டார். அவர்கள் ஒருநாள் நீர் உமது மகிமையின் அரியணையில் பெரிய அரசராக வீற்றிருப்பீர் அப்பொழுது உம்முடைய வலது பாரிசத்திலும், இடது பாரிசத்திலும் ஒருவனுமாக தாங்கள் வீற்றிருக்க வேண்டும் என்றார்கள்.

அதற்கு இயேசு நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்று உங்களுக்கு தெரியவில்லை. நான் படவேண்டிய துன்பங்களை அனுபவிக்க நீங்கள் ஆயத்தமா? என்று இயேசு அவர்களிடம் கேட்டார். நாங்கள் ஆயத்தம் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம் "உலகத்தில் அரசர்களும், தலைவர்களும் மக்களை அடக்கி ஆளுகிறார்கள்". உங்களில் ஒருவன் பெரியவனாக விரும்பினால் அவன் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்றார். ஏனென்றால் நான் பணிவிடைகளை ஏற்றுக்கொள்ள வரவில்லை, "மக்களை மீட்பதற்காகவே என் உயிரைக் கொடுக்க வந்தேன்" என்றார். ஆம், நம்மை பாவங்களில் இருந்து மீட்டு எடுப்பதற்காகவே அடிமையின் ரூபமானார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. எனவே, உலகத்திற்கு பிரகாரமான காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள கூடாது. பிசாசவன் நமக்கு பல வழிகளில் பல போராட்டங்களை கொண்டு வருவான். ஆகையால் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும். யாக் 4:6ன் படி "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது". நம்மை முழுவதுமாக தாழ்த்தி ஆண்டவரிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது கர்த்தர் நிச்சயமாகமே ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து பெருகவே பெருகப் பண்ணவார்.

**"பெருங்கத்து வேண்டும் பணிதல் சிறிய**
**சுருங்கத்து வேண்டும் உயர்வு"**
***(குறள் - 963)(தலைப்பு - மானம்)***

என்ற குறளின் படி அனைவருடனும் பணிவு வேண்டும். தாழ்மை தலையாய பண்பு.

**"துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்**
**சோர்ந்துவிட லாகாது பாப்பா!**
**அன்பு மிகுந்த தெய்வமுண்டு - துன்பம்**
**அத்தனையும் போக்கி விடும் பாப்பா!**
***(தமிழ் களஞ்சியம் - பாரதியார் பாடல்***
***- பாப்பப்பாட்டு)***

### முடிவுரை

**"உலகத்தோற்ற முதல்**
**எனக்காய் அடிக்கப்பட்டீர்**
**துரோகியாய் வாழ்ந்த என்னையும் - மீட்டு**
**புதுவாழ்வு தந்துவிட்டீர்"**

*என்ற பாடல் வரிகளுக்கேற்ப எங்களை உலக பாவத்துக்குள் அடிமையாகாமல் இருக்க மீட்டுக் கொள்ள இவ்வுலகத்திற்கு தோன்றிய பரிசுத்த தேவன் யாக் 4.10ன் படி "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப் படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்சு. இறுதியாக ஒருவன் ஜீவவாசலுக்குள் பிரவேசிக்க வேண்டுமானால் தன்னைத் தான் தாழ்த்தி, சுயத்தை வெறுத்து, பாவங்களை விட்டு மனந்திரும்ப வேண்டும். ( யாக் 5:8 ) ன் படி "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் கர்த்தரின் வருகை சமீபமாயிக்கிறதேசு. ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!*